மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.8/19

வாக்குமூலம்.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தரமூர்த்தி | ஜாதி | |
| த/பெ. | ராமசந்திரன் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 74/2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 06.02.2024-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் அப்துல் ஜாபார் என்பவரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டது எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 1995 ஆம் ஆண்டு கிரையம் வாங்கினேன். ஆனால் 1997 ல் தான் பதிவு செய்யப்பட்டது. நான் 9 1/2 செண்ட் கிரையம் வாங்கினேன். மேற்படி 9 1/2 செண்ட் அப்துல் ஜாபாருக்கு எப்படி சொந்தம் என்றால் பழனிசாமி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்து நான் கிரையம் வாங்கிய சொத்து 1,2 பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு சொந்தம் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கும் போது பிரதிவாதிகளின் குடும்பத்தினர் தாவா சொத்தில் ஓலை வீடுக்கட்டி குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. பழனிசாமிக்கு தாவா சொத்தை யார் கிரையம் கொடுத்தது என்பது எனக்கு தெரியாது. வீரமுத்து பூசாரி என்பவரை எனக்கு தெரியாது. சிங்காரம் என்பவர் வீரமுத்து பூசாரியின் மகன் என்பது எனக்கு தெரியாது. வீரமுத்து பூசாரியும் அவரது தம்பி சின்னையா பூசாரியும் சேர்ந்து தான் பழனிசாமிக்கு கிரையம் கொடுத்த ராமசாமிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வீரமுத்து மற்றும் சின்னையாவிடம் இருந்து ஒருபகுதியை ராமசாமியும் மற்றொரு பகுதியை ராமசாமியின் மனைவியும் கிரையம் வாங்கி இருக்கிறார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ராமசாமியும் ராமசாமியின் மனைவியும் தான் பழனிசாமிக்கு கிரையம் கொடுத்து இருக்கிறார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பழனிசாமி கிரையம் வாங்கிய பத்திர அசல் என்னிடம் இல்லை ஒளி நகல் மட்டும் என்னிடம் உள்ளது அந்த பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன்.

3. நான் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்து இருக்கிறேன். எலக்ட்ரிசியனாக தொழில் செய்து வருகிறேன். பழனிசாமி , ராமசாமி மற்றும் அவரது மனைவியிடம் இருந்து கிரையம்

வாங்கியதாக சொல்லும் ஆவணங்களை படித்துப்பார்த்தேனா என்றால் எனக்கு பழனிசாமி 9 1/2 செண்ட் கிரையம் வாங்கிய மட்டும் தான் தெரியும். 1ம் பிரதிவாதியின் கணவர் சிங்காரம் 9 செண்ட் இடத்திற்கு பதிலாக 9 1/2 செண்ட் கிரையம் பெற்றதாகவும் என் பெயரில் 9 1/2 செண்ட்டுக்கு தவறாக பட்டா ஏற்பட்டதாக கோட்டாசியரிடம் மனுக்கொடுத்து விசாரணை நடைபெற்றதா என்றால் இல்லை.

4. வருவாய் கோட்டாசியரிடம் இருந்து வழக்கறிஞர் மூலம் ஆஜரானேன் என்றால் சரிதான். கோட்டாசியர் முன்பான விசாரணையில் நான் 9 1/2 செண்ட் வாங்கியதாக சொன்னதற்கு ஆவணம் தாக்கல் செய்தேனா எனறால் தாக்கல் செய்தேன். வருவாய் கோட்டாசியர் முன்பான விசாரணையில் போது ராமசாமி மற்றும் அவரது மனைவி கிரையம் பெற்ற ஆவணத்தை நான் நேரடியாக எடுத்து படித்து பார்த்து இருப்பேன் என்றால் சரியல்ல. எங்கள் தரப்பில் 9 செண்ட் மட்டும் தான் கிரையம் வாங்கியதாகவும் 9 1/2 செண்ட் அனுபவம் செய்வதாகவும் கட்சி செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. கோட்டசியர் தவறாக 9 1/2 செண்டுக்கு பட்டா வழங்கப்பட்டதாக உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். மேற்கண்டவாறு கூடுதலான 1/2 செண்ட் நான் வைத்து இடத்தின் தென்புறத்தில் இருக்கிறது என்றால் சரியல்ல. அதனால் நான் அப்துல் ஜாபரிடம் கிரையம் வாங்கும்போது 9 செண்ட்டுக்கு மட்டுமே ஆவணங்கள் இருப்பது தெரிந்தும் பிரதிவாதி குடும்பத்தினரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் 9 1/2 செண்டுக்கு ஆவணம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

5. நான் கிரையம் வாங்கிய ஆவணம் மற்றும் என் மனைவி கிரையம் வாங்கிய ஆவணத்தின் அசல் என்னிடம் வீட்டில் இருக்கிறது. அதை நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் அசல் ஆவணத்தை கொடுக்கவில்லை நகலைத்தான் கொடுத்தேன். மேற்படி ஆவணங்களின் அசலை என்னால் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.